ஆண்டுக்கும் 5,6 மருந்தகங்கள் எடுத்துக்கொள்வது என்ற முறையில் இதுவரையில் 18 அல்லது 20 மருந்தகங்கள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. தொடர்ந்து நிதி வசதிக்கு ஏற்ப அதிக மருந்தகங்களை எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலனை செய்யும்போது கூடுமானால் இந்த மருந்தகத்தையும் எடுத்துக்கொள்ளலாம்.

ஆரம்ப சுகாதார நிலையம், காட்டாம்பூண்டி.

* 450 வினா.—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், காட்டாம்பூண்டி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இதுவரை வாகன வசதி அளிக்கப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 24—5—1972-ல் ஓர், வாகனம் காட்டாம்பூண்டி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு வழங்கப் பட்டுள்ளது. இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு யூனிசெஃப் (UNI CEF) நிறுவனம் மூலம் மற்றுமொரு வாகனம் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) வினாவுக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

போலி சர்டிபிகேட்டுகளுடன் வைத்தியத் தொழில் நடத்துவோர்.

* 451 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போலி சர்ட்டிபிகேட் வைத்து வைத்தியத் தொழில் நடத்தி வந்ததாக சென்னையில் யாராவது கைது செய்யப்பட்டுள்ளனரா ?

(இ) ஆம் எனில், அவ்விதம் கைது செய்யப்பட்டவர்களின் விபரம் என்ன ?